<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>

<u>விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்</u>

**OS.No: 59/2022** **நாள் 24.11.2025.**

**வாசா.1, திருமதி.வித்யாரத்னா**

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 7, 8 எதிர்வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் பி.காம் வரை படித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் உள்ள சங்கதிகளை நான் படித்து பார்த்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் முத்தையா , கிரகராஜ் என்ற இரண்டுநபர்களை சொல்லியுள்ளேன் அவர்கள் எனக்கு என்ன உறவு முறை என்று கேட்டால் முத்தையா என்பவர் என் தாத்தா, கிரகராஜ் என் தாய்மாமா. முத்தையா என்பவர் எனக்கு தாய்வழி தாத்தா. என் தாய்மாமா 1999 ம் ஆண்டு இறந்துபோனார் என்றால் சரிதான். என் தாய்மாமா இறக்கும் காலத்தில் எனக்கு வயது சுமார் 28 அல்லது 29 இருக்கும். வழக்கில் உள்ள எதிர்வாதிகள் அனைவருக்கும் எனக்கும் இடையில் நல்ல சுமுகமான உறவு இருந்து வந்துள்ளது என்றால் சரிதான். பிராது 4 வது அயிட்ட சொத்தாக நான் காட்டியுள்ள ஜெயலட்சுமி பயர் ஒர்க்ஸ் என்பதை என் தாய் மாமா கிரகராஜ் என்பவர் என் தாத்தா முத்தையாவுடன் சேர்ந்து நடத்தி வந்ததாரா என்று கேட்டால் ஆமாம் . என் தாய்மாமா கிரகராஜ் இறந்துபோன பின்பும் எங்களுக்கும் வழக்கில் உள்ள என் தாய்மாம மனைவி மற்றும் மகளான இவ்வழக்கில் 7 மற்றும் 8 எதிர்வாதிகளுக்கு இடையில் நல்ல சுமுகமான உறவும் இருந்து வந்தது.தற்போதும் நல்ல உறவாக தான் உள்ளோம். என் தாத்தா முத்தையா என்பவர் 09.06.2020 ம் ஆண்டு கொரோனா காலகட்டத்தில் இறந்துபோனார். எங்களுக்கு என் தாத்தாக்குரிய சொத்தில் இருந்து என் அம்மா எப்போது எல்லாம் வருவாரோ எப்போது எங்களுக்குரிய பங்கை கொடுத்து வருவார். எங்கள் தாய் மற்றும் அனைவருக்கும் சம பங்காக கொடுப்பார். என் தாய்மாமா இறந்த பின்பு அவருடைய வாரிசுதாரர்களான இவ்வழக்கின் 7 மற்றும் 8 எதிர்வாதிகளை என் தாத்தா நல்ல பாதுகாப்போடு பங்கும் கொடுத்து பார்த்து வந்தார். என் தாத்தா இறக்கும் காலம் வரையிலும் 5 பேருக்கும் பங்கை அவ்வப்போது கொடுத்து வருவார் அவர் உயிரோடு இருந்த போது எங்களுக்கு பாகம் வேண்டும் என்று சொல்லி நாங்கள் கேட்காமலேயே அவர் கொடுத்துவந்தார். என்னிடம் காட்டப்படும்

வாசாஆ.15 ஆவணத்தில் முத்தையாவின் வாரிசு சான்றிதழில் என் தாய்மாமா கிரகராஜ் என்பவரை வாரிசாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தாய்மாமா இறந்த பின்பு அவருடைய வாரிசுதாரர்களாக 7, 8 எதிர்வாதிகள் என்று சொன்னால் அது சரிதான். என் மாமாவுக்கு உரிய 1/5 பாகத்தில் வழக்கில் உள்ள 7, 8 எதிர்வாதிகளுக்கு பாத்தியம் உண்டு என்றால் சரிதான்.

**(குறுக்கு விசாரணை 1 முதல் 3 எதிர்வாதிகள் தரப்பில் மனுவின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது. )**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 24th day of November 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.